# பிரதான தகவல் கூற்று மற்றும் சேவை விபரக் கையேடு

| கணக்கின் பெயர் | MCB Mudaraba தவணை வைப்புகள் |
|---|---|
| விபரம் | எம்சீபி முதரபா தவணை வைப்பு மூலம் எதிர்காலத்திற்கான சரியான வழியைச் சேமித்து, பல நன்மைகளைப் பெறுங்கள்.<br><br>தவணை கால முதலீடுகள் 01 மாதம் முதல் 12 மாதங்கள் வரையிலான இலாபப் பகிர்வு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை மற்றும் வங்கி முதலீட்டுத் தொகுப்பிலிருந்து ஈட்டப்படும் இலாபத்தில் ஒரு பங்கை வழங்குகின்றன, இது மேலும் நீங்கள் செய்யும் முதலீட்டுத் தொகையைப் பொறுத்து மாறுபடும். அதிக இலாப முதலீட்டுத் தொகுப்பை உருவாக்கினால், வாடிக்கையாளருக்குச் செலுத்த வேண்டிய இலாபம் அதிகரிக்கும். இந்தத் தயாரிப்பு வழங்கும் அனைத்து அம்சங்கள் மற்றும் வசதிகளுடன், தங்கள் நிதியில் ஆரோக்கியமான வருமானத்தைப் பெற விரும்புவோருக்கு இது மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. எதிர்காலத்திற்காகச் சேமிக்க இது ஒரு சிறந்த கருவியாகும். |
| நாணயம் | இலங்கை ரூபா. |
| முக்கிய விடயங்கள் | குறைந்தபட்ச வைப்பு: 50,000/- |
| | கிடைக்கப்பெறும் தவணை வைப்புகள்: 01 மாதம், 03 மாதங்கள், 06 மாதங்கள், 01 வருடம். |
| இலாப வீதங்கள் | சமீபத்திய இலாப விகிதங்களுக்கு, https://www.mcb.com.lk/islamic-banking/ ஐப் பார்வையிடவும் |
| இலாபக் கொடுப்பனவு வழங்கும் கால இடைவெளி | ஒவ்வொரு தவணை வைப்புக்கும் மாதாந்த மற்றும் முதிர்ச்சி தேர்வுகள் கிடைக்கப்பெறும் |
| நன்மைகள்/ பெறுமதி சேர் சேவைகள் | இலாபத்தை வரவு வைப்பதற்கும் மற்றும் பிற நிதி பரிவர்த்தனைகளை செய்யவதற்கும் சேமிப்பு/ நடைமுறைக் கணக்கைத் திறக்கலாம்/ இணைக்கலாம். |
| | தவணை வைப்புக்கு எதிராக பாதுகாப்பான வைப்பு பெட்டகத்தை (கிடைப்பதற்கு உட்பட்டது) பெறமுடியும். (தயவுசெய்து கட்டணங்களுக்கு வங்கி சேவைக் கட்டண அட்டவணையைப் பார்க்கவும்) |
| கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் | தற்போதைய கட்டணங்கள் மற்றும் சேவை மற்றும் பிற பெறுமதி சேர் சேவைகள் தொடர்பான கட்டணங்களுக்கு www.mcb.com.lk ஐப் பார்வையிடவும் (வங்கி கட்டணங்களின் அட்டவணை) |
| தகைமைகள் | தனிநபர் - இலங்கையில் வதியும் 18 வயதுக்கு மேற்பட்ட நபர்கள் (தனிநபர்/ கூட்டு) |
| | நிறுவனங்கள் - அந்தந்த நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் |
| அவசியமான ஆவணங்கள் | சரியாக பூர்த்தி செய்யப்பட்ட கணக்கு கணக்கைத் திறப்பதற்கு தேவையான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் தொடர்புடைய படிவங்கள் |
| தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு | செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது தேசிய அடையாள அட்டையுடன் கூடிய கடவுச்சீட்டு |
| | முகவரிச் சான்று (தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலிருந்து வேறுபட்டால்) |
| நிறுவன வாடிக்கையாளர்களுக்கு | வியாபாரப் பதிவு மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்/ படிவங்கள் |
| | பணிப்பாளர்கள்/ பங்குதாரர்களின் அடையாள ஆவணங்கள் |
| | வங்கிக்கு, தனிநபர் அல்லது நிறுவனத்தின் அடையாளத்தை நிரூபிப்பதற்கு வேறு ஏதேனும் ஆவணம் தேவைப்படலாம் |
| கணக்கினைத் திறப்பதற்கான நடைமுறை | கணக்கைத் திறக்க மற்றும் ஏனைய பெறுமதி சேர் சேவைகளைப் பெறுவதற்கு தயவுசெய்து அருகிலுள்ள எம்சீபி வங்கிக் கிளைக்குச் சென்று முழுமையான ஆவணங்களைத் ஒப்படைக்கவும் |
| ஏனைய தொழிற்பாட்டு தகவல்கள் / நியதிகள் மற்றும் நிபந்தனைகள் | முதிர்ச்சியடையாத மீளெடுப்புகளுக்கு, வங்கி அதன் தற்துணிபின்படி இலாபத்தை குறைப்பதற்கு அல்லது சாதாரண சேமிப்புக் கணக்குக்குப் பொருந்தக் கூடிய இலாப பங்கீட்டு வீதமாக மாற்றுவதற்கு உரிமையைக் கொண்டுள்ளது. |
| | திருப்திகரமான அளவில் பராமரிக்கப்படாத அல்லது சட்டப்பூர்வ தேவைகளைப் பூர்த்தி செய்யாத எந்தவொரு கணக்கையும் நிறுத்திவைத்திருக்க∴மூட வங்கிக்கு உரிமை உண்டு. |
| | தவணை வைப்புக் கணக்குகள் 10 ஆண்டுகளுக்கு வாடிக்கையாளர் பரிவர்த்தனை/ தொடர்புகள் இல்லாமல் இருப்பின் (முதிர்வுக்குப் பிறகு) கைவிடப்பட்டதாகக் கருதப்பட்டு ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி கையாளப்படும். |
| | இலங்கை மத்திய வங்கியின் வைப்புத்தொகை காப்புறுதித் திட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்கு இணங்க வைப்புக்கள் பாதுகாக்கப்படுகின்றன. |
| | இணக்கத்திற்காக/ தவறுகைகளை மீளத் திருப்பலுக்காக/ அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகளுக்காக ஏதேனும் தவறான/ அங்கீகரிக்கப்படாத பரிவர்த்தனைகள் எழுத்துப்பூர்வமாக கிளைக்குத் தெரிவிக்க வேண்டும். |
| | வங்கியின் உள் கொள்கைகள்/ செயல்முறைகள் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டுதல்களின்படி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வப்போது மாறக்கூடும், மேலும் அவை வங்கியின் இணையதளம்∴கிளை அறிவித்தல் பலகைகளில் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான ஊடகம் மூலம் முன்கூட்டியே அறிவிக்கப்படும். |
| மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஊடகங்கள் | எம்சீபி வங்கிக் கிளைகளுக்கு அழைப்பை மேற்கொள்ளுங்கள்/ விஜயம் செய்யுங்கள்\| இணையத்தளம்: www.mcb.com.lk \| ஹொட்லைன்: 011 5222 200 \|<br>மின்னஞ்சல் : info@mcb.com.lk |
| முறைப்பாடுகளை கையாளும் நடைமுறை | எந்த எம்சீபி வங்கி கிளை மூலமாகவும் புகார்களை அனுப்பலாம் (பிரத்தியோக புகார் பெட்டி உள்ளது) |
| | பிரத்தியோக நேரடி தொடர்பு மையம் :<br>திணைக்களத் தலைவர் - இணக்கம், எம்சீபி வங்கி லிமிடட், 08, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு 01.<br>தொலைபேசி : 011 5222 230 \| மின்னஞ்சல்: complaints@mcb.com.lk |
| | தீர்மானம் உங்களுக்கு திருப்திகரமாக இல்லாவிட்டால்/ 04 வாரங்களுக்குள் தீர்க்கப்படாவிட்டால், நீங்கள் புகாரை பின்வருமாறு விரைவுபடுத்தலாம்:<br>நிதி ஒம்புட்ஸ்மேன், இல.01, பெதஸ்தா பிளேஸ், மிலாகிரிய, கொழும்பு - 05<br>தொலைபேசி: 011 2595 624 \|மின்னஞ்சல் : fosril@sltnet.lk \|இணையத்தளம்: www.financialombudsman.lk |

எம்சீபி வங்கி லிமிடட் என்பது இலங்கை மத்தியவங்கியின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படும் அனுமதிப்பத்திரம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

கடன் மதிப்பீடு: "AA- (lka)" | Outlook Stable (Fitch Ratings)